## உள்ளே...


* வாசகர் பூங்கா
* ஆசிரியர் குழு உரை
* வாழும் தெய்வங்கள் (மைக்கல் ஆர். ஜோக்கிம்)
* இவர்தான் அப்பா (சாந்தினி)
* படித்து சுவைத்தவை (யோகநாதன்)
* தினம் தினம் தவம்
* நானும் எழுதுகிறேன் (அம்பிகாபதி)
* என்னப்பா காயம்
* பட்டாம் பூச்சி (யஸ்ரின் பரஞ்ந்து)
* நான் ஏமாற்றுக்காரனு (சந்திரகுமார்)
* எதிர்கால மனைவி
* சிந்தனை துணுக்குகள் (ராஜா)
* சினிமாப்பாடல்கள் பேசுகின்றன
* பரந்த மனம் வேண்டும் (எஸ். ஜே. எவ்.)
* உயர்ந்திட வேண்டும்
* இதுதான் வேண்டும் (ஸ்ரீவன்)


உளவியல் மன்றம்


மலர். 4 ஆடி - ஆவணி 1978 * இதழ் 4 விலை 45 சதம்

## வாசகர் பூங்கா

### சபாஷ்! சபாஷ்!!

நான் படித்தேன், சுவைத்தேன், பூரிப்படைந்தேன், சபாஷ். சபாஷ் இவ்வுலகில் வாழும் அத்தனை சீவன்களையும் நான் ஏன் பிறந்தேன்?, ஏன் வாழ்கிறேன்? என்ற கேள்விகளை நெஞ்சில் எழச் செய்கின்றது.

— அன்ரனி ராஜ், புங்கையூர்.

### பெரும் மாற்றம்!

'நான்' என்னில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. என் சிந்தனைத் திறனைத் தட்டிவிட்டுள்ளது

— ராஜ், கண்டி.

### பாராட்டுக்கள்!

உண்மையான 'மனிதத்துவத்தை' உருவாக்க சில வழிகள் தந்த அன்பர் மேவினுக்கு எனது பாராட்டுக்கள்.

— சுரேஷ், நிலாந்தி, மேவின், பண்டாரவளை.

### வரவேற்கின்றேன்!

'நான்' உளவியல் மஞ்சரி 'கேள்வி, பதில்' பகுதியைத் தாங்கி வருவது வரவேற்கத்தக்கது. இதனால் பெரும் பாலானோர் நன்மை அடைகின்றனர். தொடரட்டும் அதன் பணி.

---

ஏ, மனிதா! நீ இருக்கிறபோது மரணம் இல்லை. மரணம் வரும்போது நீ இருக்கப் போவதில்லை. நீ இருக்கிறபோது இருக்க முடியாத ஒன்றுக்காக மரணத்திற்காக நீ ஏன் அழ வேண்டும்.

— ஏபிரஸ்.

## ஆசிரியர் குழு உரை

வாழ்க்கை வாழ்வதற்கே. அந்த வாழ்க்கையிலே பல அத்தியாயங்கள். ஒவ்வொரு அத்தியாயத்திலும் பல அனுபவங்கள். ஒவ்வொரு அனுபவத்திலும் பல படிப்பினைகள்.

சில அனுபவங்கள் இன்பமானவை; சில துன்பமானவை. சில மறக்கக்கூடியவை; சில மறக்கமுடியாதவை. இந்த இதழிலே தங்கள் மறக்கமுடியாத அனுபவங்களை பலர் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு "நான்" தனது நன்றியை தெரிவிக்கின்றான்.

இந்த இதழில் ஓர் இளம் பெண் வாழத்துடிக்கின்றாள், ஒரு ஆண் "நான் ஏமாற்றுக்காரனா" என கேட்கிறான். அன்புள்ளம் கொண்டவர்கள் வாழும் தெய்வங்கள்; வாழ்க்கையில் முன்னேற பரந்த மனம் வேண்டும்; அப்பா எப்படியிருப்பார்; ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு ஒருவரை எடைபோடக்கூடாது. எதிர்கால மனைவியைப் பற்றிய நான் வாசகர்களின் எண்ணங்கள்; உயர்ந்திட வழி சொல்லும் கவிதை மேலும் பல அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றான்.

இவற்றை படித்து சுவைத்த பின் இந்த அனுபவங்களைப் பற்றிய உங்கள் எண்ணங்களையும், விமரிசனங்களையும் எதிர்பார்க்கின்றான்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை உங்கள் வாழ்க்கை அனுபவங்கள் இன்பமானதாகஇருக்க வேண்டுமென்னும்விருப்பத்துடன் உங்கள் கைகளில் இவ்விதழை தவழ விடுகின்றான்.

நன்றி,

ஆசிரியர் குழு,

கடிதம், சந்தா, கட்டுரைகள்
அனுப்பப்பட வேண்டிய முகவரி,

"நான்"
அ. ம. தி. இல்லம்
அம்பிட்டி

# வாழும் தெய்வங்கள்

''அன்பு வாழும் உள்ளம்
அது தெய்வம் வாழும் இல்லம்''

சொன்னவர் வசனங்களில் உள்ள அழகுக்காகச் சொல்லவில்லை.

அவற்றிலேயுள்ள ஆழமான அர்த்தத்திற்காகத் தான் சொல்லியிருக்கிறார்.

அன்பு எங்கே வாழ்கிறது?

உலகிலே நடக்கும் அக்கிரமங்களையெல்லாம் பார்த்து சலிப்படைந்த ஒருவர் கடவுளிடம் போய்க் கேட்டாராம்.

"உலகில் அக்கிரமங்கள் மலிந்துவிட்டன. நீரும் இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கின்றீர். நீர் ஏன் அவதாரமெடுத்து உலகை திருத்தக்கூடாது?''

கடவுள் சொன்னார்,

"சிஷ்ய பரிபாலனம், துஷ்ட நித்திரகம். தீயவர்களிடமிருந்தும் தீயவற்றிலிருந்தும் என் சீடர்களான நல்லவர்களையும் நல்லவற்றையும் காப்பாற்றுவதற்கே நான் அவதாரம் எடுக்கவேண்டும். தீயவர்கள் நிறைந்திருக்கும் உலகிலே அனைவருமே தீயவர்களாகிவிட்ட நிலையிலே யாரைக்காப்பதற்காக நான் அவதாரம் எடுக்கவேண்டும்?''

நகைச் சுவைக்காககூறப்பட்ட கதை இது. ஆயினும் அர்த்தம் பொதிந்தது. சரி, இப்பொழுது நமது கேள்விக்குவருவோம்.

அன்பு எங்கே வாழ்கின்றது?

நமது இளைஞர்களினதும், இளம் பெண்களினதும் 'பனியன்'களில் வாழ்கின்றது.

சினிமாப்பட விளம்பரங்களில் வாழ்கின்றது.

வெறும் உடல் உறவுகளை உருவகப்படுத்தும் கதைகளில் வாழ்கின்றது,

உள்ளத்தில் அன்பு வாழ்ந்தால்தான் அங்கே தெய்வம் வாழமுடியும்.

'அன்பு'—மூன்றெழுத்து.

'அன்பு, வாழும் உள்ளத்தில்தான் 'கருணை' உதிக்கின்றது.

'கருணை'—மூன்றெழுத்து.

'அன்பு' உள்ளவனிடம் 'கனிவு' இருக்கும்.

'அன்பு' வாழும் உள்ளத்தில் 'தூய்மை' இருக்கும்.

உண்மையே பேசும் 'வாய்மை' இருக்கும்.

'கனிவு', 'தூய்மை' 'வாய்மை'—மூன்றெழுத்து.

உள்ளத்திலே 'அன்பு' வாழும் மனிதன் தன் 'கடமை' யில் தவறமாட்டான்.

'நேர்மை'க்கு அணிகலனாக இருப்பான்.

'நேர்மை' 'கடமை'—மூன்றெழுத்து.

'அன்பு' வாழும் உள்ளம் கொண்டவன் நன்றி மறவான்.

ஏற்றத் தாழ்வுகள் வந்திடினும் 'நட்பு' மறவான்.

ஆத்திரம் கொள்ளாத 'பொறுமை' எனும் நற்குணமிருக்கும்.

சொல்லில், செயலில், வாழ்வில் வாழும் வழியில் 'எளிமை' இருக்கும்.

நன்றி', 'நட்பு', 'பொறுமை', 'எளிமை' — மூன்றெழுத்து.

அவன் வாழ்விலே,

'பணிவு' இருக்கும், 'பண்பு' இருக்கும்.

'மென்மை' இருக்கும், 'சாந்தி' இருக்கும்.

இவற்றிலெல்லாம் மூன்றெழுத்து.

மனிதனிடம் இருக்கவேண்டிய பெரும்பான்மையான நற்குணங்களுக்கு தமிழிலே மூன்றெழுத்து.

'அன்பு' என்ற மூன்றெழுத்து உண்மையாகவே உள்ளத்தில் வாழ்ந்தால் மேற்சொன்ன மூன்றெழுத்து நற்குணங்கள் எல்லாம்—அந்த மனிதனின் உள்ளத்திலே உருவாகி, செயலிலே வெளிப்படும்.

அந்த மனிதனின் உள்ளத்திலே தெய்வம் வாழும் இதில் சந்தேகம் இல்லை.

அவ்வாறான மனிதர்கள் வாழ்ந்தார்கள் இப்பொழுதும் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே,

நீங்களும் நானும்?

— மைக்கல் ஆர். ஜோக்கிம்.

## இவர்தான் அப்பா

"என்னங்க... இங்க பாருங்க... இவன் சாப்பிடுறு னில்லை..."

"அப்பா, ஆறு மணிக்கு வருவார் அதுக்கு முதல் வந்திடு"

"டேய், விளையாடினது போதும்... அந்தா அப்பா வர்ருர்... பேசாம வீட்டில் வந்து படி."

இவை குடும்பங்களில் அன்ருடம் கேட்கும் வசனங் களில் சில.

இவை சாதாரணமானவை.

ஆனுல்,

இதன் பின்னணியில் அமைந்திருக்கும் உண்மைகள் பயங்கரமானவை.

சிறுவயதிலிருந்தே 'அப்பா' என்ருல் பொல்லா தவர், கண்டிப்பானவர், எனும் எண்ணத்தை குழந்தை யின் மனதில் செலுத்துகின்ருேம்.

இது குழந்தையின் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

குதூகலத்துடன் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை 'அப்பாவைக் கண்டவுடன், அதன் குதூகலம் மறைகின்றது.

வளர வளர இந்த பயம் அதிகரிக்கின்றது.

இன்று

பல வீடுகளில் பார்க்கலாம்.

அப்பா—பிள்ளை உறவு.

நேருக்கு நேர் கதைப்பது குறைவு.

அப்படி கதைத்தாலும் அது 'சீரியஸாகத்'தான் இருக்கும்.

* * *

சாப்பிடாவிட்டால் அப்பாவிடம் சொல்லிக் கொடுப் பேன்.

விளையாடப்போனுல், அப்பா வருவதற்கு முதல் வந்துவிடு.

படம் பார்க்கப்போனுல் அப்பாவுக்குத் தெரியாமல் போய் வா.

இவற்றையெல்லாம் அம்மாமார் செய்யும் போது அவர்கள் மனதில் உண்மையிலே நல்ல எண்ணங்கள் தான் இருக்கின்றன.

## படித்துச் சுவைத்தல்

“பார்த்ததினுல் கண்கள் நிறைவுற்றதில்லை
கேட்டதினுல் காதுகள் நிறைவு கொண்டதுமில்லை”.
“தன்னைப்பற்றித் தாழ்ந்த எண்ணங் கொண்டு
பெருத்த மகிமைகளையெல்லாம் புறக்கணித்தவனே
பெரியவன்”

“தீச் செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது
அது செய்தகாலத்திலல்ல வெகுகாலத்திற்குப் பிறகு
அது நினைவிற்கு வரும் போதுதான்
காரணம்,
அந்த நினைவை ஒருபோதும் அகற்ற முடியாதே.
“அழகு என்பது சாரமற்ற பொருள்
தானுக இயங்கும் சக்தி அதற்கில்லை
அது ஒரு மாயை
ஓர் ஏமாற்றம்
பலவீனங்களை மறைக்கும் திரைதான் அது”.
‘பொறுமையில் உயர்ந்த தவமில்லை.
திருப்தியில் உயர்ந்த இன்பமில்லை.
அவாவிலும் பெரிய தீமை இல்லை.
கருணையிலும் பெரிய அறமில்லை.
மன்னித்தலிலும் மிக்க ஆயுதமில்லை”.
தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும்
துயரங்களும் அடங்கி உள்ளத்தில் அமைதி
உண்டாவதற்குப் பிரார்த்தனையைவிட வழிவேறில்லை”.

— யோகநாதன்.

---

“அப்பாவை மட்டந்தட்ட வேண்டும், அப்பாவை விட தான் இரக்கம் உள்ளவள் என காட்டவேண்டும், எனும் எண்ணத்துடன் செயல்படுவதில்லை.

குழந்தை நன்ருக வளர வேண்டும்.

வீட்டில் ஒருவருக்காவது பயப்படவேண்டும்.

அப்பொழுதுதான் குழந்தை நல்ல விதத்தில் வளரும்.

இந்த எண்ணத்தை மனதில் கொண்டுதான் அம்மா செயல்படுகின்ருள்.

ஆனுல்,
இதே நல்ல எண்ணம்.
குழந்தையின் உள்ளத்தை பாதிக்கின்றது.
பயத்தின் மத்தியில் வாழச் செய்கின்றது.

## தினம் தினம் தவம்

திருமணமான ஒரு வருடத்தில் எனக்கு இரண்டு குறைப் பிரசவம். டாக்டர், "கருப்பைசாய்ந்திருக்கிறது. முழுக் குழந்தை பிறப்பது கஷ்டம்," என்று கூறினர். மூன்றும் முறை கருத்தரித்தபோது ஒரு லேடி டாக்டர், "கருப்பை சாய்ந்திருப்பது உண்மைதான். ஆனால் நான் சொல்வது போல் செய்தால் குழந்தை பிறக்க வாய்ப்புண்டு. ஒரு நாளைக்கு மூன்று வேளை, வேளைக்கு அரைமணி நேரம் வீதம் மண்டியிட்டு, இரு கட்டைவிரலை ஊன்றிக் குனிந்து நமஸ்காரம் செய்கிறமாதிரி இரு கைகள் மீதும் தலையை வைத்தவாறு இருக்கவேண்டும்," என்றார்.

நாங்கள் இருந்தது ஒன்றிக் குடித்தனம். யாருக்கும் தெரியாமல், கதவைச் சாத்திவிட்டு, அலாரத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு டாக்டர் சொன்னது போலவே கவிழ்ந்து தவம் செய்தேன். அந்த வீட்டில் மின்சாரம் கிடையாது. என் மாமியார் பரிவுடன் எனக்கு விசிறுவார். நான் சண்முகக் கவசம் சொல்லிக் கொண்டே இருப்பேன்.

பிரசவநாள் வந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக குழந்தை வெளிவருவதை என்னால் உணர முடிந்தது. எனக்கு சுகப் பிரசவம் நடந்தது. எட்டுப்பவுண்டு எடையுடன் மலர்க் கொத்து போல் பிறந்த என் அருமை மகளை என்னிடம் காட்டினர். அந்த நேரத்தில் நான் அடைந்த பரவசத்தை, எழுதி விளங்கவைக்க இயலாது.

— நன்றி, குமுதம்.

---

நாளை திருமணமாகப் போகும் இன்றைய இளம் பெண்களே,

பிறக்கவிருக்கும் உங்கள் குழந்தைகளை பயமுறுத்தி திருத்த வேண்டாம்.

'அன்பில்' திருத்துங்கள்.

உண்மையான, குதூகலமான குடும்பத்தை உருவாக்கலாம்.

— சாந்தினி.

## நானும் எழுதுகிறேன்!

பணம்... பணம்... பணம்... இன்று எதற்கும் பணம்.
நான் வாழத்துடிக்கின்றேன்.
ஆனால்,
வாழ்க்கையின் இன்பத்தை நான் இன்னும் அனுபவிக்கவில்லை.
காரணம்,
என்னிடம் பணமில்லை.
விபச்சாரியிடம்போய்இன்பம் அனுபவிக்கும்போது, அவளுக்கு பணம் கொடுக்கின்றார்கள். பணம் கொடுத்து இன்பம் அனுபவிக்கின்றார்கள். அதுவும் ஒரு சில நிமிடங்களுக்கு... மணித்தியாலங்களுக்கு...
ஆனால்,
மனைவியாக வருபவள்...
வாழ்நாள் முழுதும் அவன் உடற்பசியைத் தீர்க்கின்றாள்.
அவனை தன் கண்ணைப்போல பாதுகாக்கின்றாள்.
அப்படியிருந்தும்.
அவள் அவனது பசியைத் தீர்ப்பதற்கு.
அவனைப் பாதுகாப்பதற்கு.
அவள் அவனுக்கு பணம் கொடுக்கவேண்டும்.
அதுவும் ஆயிரக்கணக்கில்.
சீதனம் என்ற பெயரில்.
இன்றைய உலகம் இதுதான்.
ஏனோ தானோவென்று வேலை செய்பவர்களுக்கு கைநிறைய சம்பளம்.
தங்கள் முழு சக்தியையும் பிரயோகித்து, இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடும் தோட்டத் தொழிலாளருக்கு...
எல்லாவற்றிலும் இதே நிலைதான்.
என்னைப் போன்றோர் வாழ முடியாதபோது விபசாரியாகின்றோம்.
என்ன செய்வது? எமக்கும் உணர்ச்சி இருக்கின்றது.
ஆனால், பணமில்லை...
உடனே 'தவறியவள்' என்று பட்டம்.
சீதனக் கொடுமையின் விளைவு இது.
இதைப்பற்றி பலரும் எழுதிவிட்டார்கள்.
நானும் எழுதுகிறேன்.
மாற்றம் வருமென எதிர்பார்க்கவில்லை.
அவ்வளவுக்கு எமது சமுதாயம் பக்குவப்படவில்லை.

— அம்பிகாவதி.

## என்னப்பா காயம்

நாங்கள் திருநெல்வேலியில் இருந்த சமயம். எங்களுக்கு அப்பொழுது திருநெல்வேலி டவுனிலிருந்து வாடிக்கையாக ஒரு கறிகாய்க்காரன் கறிகாய் கொண்டு வந்து போடுவான். ஒரு நாள் அவன் ஜங்ஷனில் விற்றுக்கொண்டு வரும்பொழுது அவன் கால் மீது ஒரு சைக்கில் ஏறி இரண்டு விரல்கள் நன்ருக நசுங்கிச் சதை பிய்த்து விட்டது. அவன் அந்த காயத்துடனும், வலியுடனும் எங்கள் வீட்டிற்கு கறிகாய் கொண்டு வந்தான். நானும் என் பக்கத்து வீட்டு அம்மாளும் 'காலில் என்னப்பா காயம்?' என்று கேட்டோம். அவன் விவரம் சொன்ஞன். பிழைப்பை விட முடியாதாகையால் அடிபட்ட காலுடனேயே கறிகாய் விற்க வந்திருப்பதாகச் சொன்ஞன்.

என் நான்கு வயது மகன் ஸ்ரீதர், நான் கறிகாய்க்காரனுடன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவன் உள்ளே சென்ருன். திரும்பி வந்தபோது அவன் கையில் ஒரு பெரிய துணி, ஒரு கப்பில் தண்ணீர், டெட்டால் பாட்டில், பஞ்சு, ஆயின்ட்மென்ட் ஆகியவை இருந்தன. "இந்தா மருந்து போட்டுக் காயத்தை நன்ருக கட்டிக் கொள்," என்ருன்.

கறிகாய்க்காரன் மனம் நெகிழ்ந்து, "அம்மா, நான் இதுவரை இருபது வீடுகளுக்கு மேல் இந்தக் காலுடன் கறிகாய் விற்றுவிட்டு வந்தேன். எல்லோரும் காலில் என்னவென்று கேட்டார்களே தவிர ஒருவருக்காவது இந்தமாதிரி மருந்து தரணும் என்று தோன்றவில்லே," என்ருன்.

எனக்கு ஒருபக்கம் வெட்கமும், மறுபக்கம் பெருமையும்.

— நன்றி, குமுதம்.

---

நீங்கள் இளமையாக தோன்றுகிறீர்கள் என்று யாராவது சொன்ஞல், முதுமையை மறைக்கிறீர்கள் என்று சொல்லாமல் சொல்கிருர்கள்.

— வாஷிங்டன் இர்விங்.

## பட்டாம் பூச்சி

ஒரு செவ்வாய்க்கிழமை.

பிற்பகல் நான்கு மணியிருக்கும்.

நான் எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன்.

எனது நண்பர் வீட்டில் இல்லை.

நண்பரின் பெண் இருந்தாள்.

வானொலி அலறிக் கொண்டிருந்தது.

'பட்டாம் பூச்சி' படத்தில் ஒரு பாடல்.

"எத்தனை மலர்கள் தாவும் பட்டாம் பூச்சி
அது எத்தனையோ இருக்குமடி அன்பு மீனாட்சி"

"ஆண்களே இப்படித்தான்..."

திரும்பிப் பார்க்கின்றேன்.

வானொலியில் அல்ல... நண்பரின் மகள்.

"எப்படி .."

"அப்படித்தான்... இந்தப்பாட்டிலே தெரியுதே..."

"ஆண்கள் பட்டாம் பூச்சிகள், பெண்கள் மலர்கள் இல்லையா..."

"ஆமா..."

"பட்டாம் பூச்சிகள் பல மலர்களிலும் அமர்ந்து தேன் குடிக்கின்றன"

"ஆமா..."

"அதே நேரத்தில்... ஒரு மலரில் ஒரு பட்டாம் பூச்சி மட்டும் அமர்வதில்லை... பல பட்டாம் பூச்சிகள் ஒரே மலரில் அமர்ந்து தேன் குடிக்கின்றன... மலரும் இடமளிக்கின்றது..."

"ஆ... ம்.. ம்... நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு விளங்குது... இங்க பாருங்க... கவிஞர்கள் எத்தனையோ பேர் சொல்லியிருக்காங்க... ஆணைப்பற்றித் தானே கூறியிருக்கிறாங்க... பெண்ணைப்பற்றி ஒன்றும் சொல்லல்லியா..."

"அந்தக் காலத்தில பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருந்தாங்க... பருவமடைந்த பெண் வீட்டு வாசல்படியைத் தாண்டுவதில்லை... ஆண்கள்தான் அவர்களைத் தேடிப்போகனும்... இந்த பாட்டிலும் பாரு... மலர் அப்படியே இருக்கு... அங்குமிங்கும் போகாது... பட்டாம்

பூச்சிதான் பறந்து திரியும்... அதுவும் பாரு... பட்டாம் பூச்சி எல்லா மலர்களையும் நாடி போகாது... தன்னைக் கவர்ற மலர்களை மட்டுந்தான் நாடும்... அதேபோலத் தான் ஆண்களும்... எல்லாப் பெண்களிடமும் போவதில்லை... எல்லா பெண்களையும் அணுகுவதில்லை... பெண்களும் இடம் கொடுக்கின்றார்கள்... அவர்கள் இடம் கொடுக்காவிட்டால்..."

"கவிஞர், பெரியவங்க எல்லோரும் ஆண்களைத் தானே குறைகூறுறாங்க...

"உண்மைதான்... அந்தகாலத்தில நினைச்சாங்க மலரை நாடிப் பட்டாம் பூச்சி போகுதுன்னு, ஆனால் மலர் தான் பட்டாம் பூச்சியை கவர்ந்து இழுக்குதுங்கிறதை மறந்திட்டாங்க...அல்லது அவங்களுக்கு புரியல்ல... இப்படித்தான் பாரு பல விஷயங்கல்ல வெளித் தோற்றத்தைக் கொண்டே அந்த விஷயத்த ஏடை போடுறாங்க... வண்டு மலரை நாடுதோ மலர் வண்டை நாடுதோ என்பது பிரச்சினைகளில்... இப்படியான பல ஆண்கள் இருக்கின்றார்கள். அதே நேரத்தில் பலபெண்களும் இருக்கின்றார்கள்... ஆனால் அது பட்டாம் பூச்சி ஏன் மலரை நாடுது— மலர் ஏன் பட்டாம் பூச்சியை ஏற்றுக்கொண்டு, தேன் அருந்த இடம் கொடுக்குது என்பது தான் பிரச்சினை.

"ஆ... எப்ப வந்திங்க"

எனது நண்பர் வருகிறார். அவர் மகள் எழுந்து செல்கின்றாள். நானும் நண்பரும் வேறொரு பிரச்சினையைப் பற்றி சுவைத்துக்கொண்டிருக்கிறோம்.

— யஸ்ரின் பர்ஹுந்து.

---

ஒரு பெண்ணையோ......ஆணையோ விட்டு வாழவே முடியாது என்னும் எண்ணத்தை நமது மனதில் செலுத்துவதற்கு முன், "காதலிக்க நமக்கு தகுதி இருக்கின்றதா? அவரோ—அவளோ காதலிக்கத் தகுந்தவர்தானா? "என்று பலமுறை எண்ணிப் பார்க்க வேண்டும். பகுத்தறிவு என்பதை இந்த சந்தர்ப்பத்தில்தான் உபயோகிக்க வேண்டும்.

## நான் ஏமாற்றுக்காரனா?

"ஆண்கள் பொல்லாதவர்கள் ஏமற்றுக்காரர்கள்"
"ஆண்களையே நம்பக்கூடாது"
"ஆசைகாட்டி மோசம் செய்வார்கள்'.

நானும் ஒரு ஆண்தான். எனக்குத் திருமணமாகி விட்டது.

எனது திருமணத்திற்கு முன் நான் ஒரு பெண்ணை காதலித்தேன்.

உண்மையாகவே காதலித்தேன்.

அவளின்றி நானில்லை, நானின்றி அவளில்லை, எனும் நிலை.

ஆனால், இன்று.........
அவள் இல்லை... நான் இருக்கின்றேன்......
இன்னொருத்தியுடன் வாழ்கிறேன்.
இல்லை..... இல்லை அவளும் இருக்கின்றாள்
என்னைத் திட்டிக்கொண்டே இருக்கின்றாள்,
நான் அவளை ஏமாற்றி விட்டேனாம்.
ஆண்களே இப்படித்தானாம்......

* * *

ஆகளது அண்ன்பு பொதுவாக 'உடலில்' (body) தான் தங்கியுள்ளது. பெண்களது அன்பு ஆளில் (person ) தங்கியுள்ளது. இது உளவியல் வல்லுனர்களின் கூற்று உண்மையும் கூட.

இதற்கு நானும் விதிவிலக்கல்ல.

நான் அவளை விரும்பினேன்......அவள் உடலை விரும்பினேன்.

அவள் என்னை விரும்பினாள்...... உயிருக்கும் மேலாக நேசித்தாள்.

இருந்தும் ...

நான் அவள் கையைப் பிடிக்கக்கூடாது

......................

......................

இன்னும் எத்தனையோ கட்டுப்பாடுகள்.

எதைச் செய்தாலும், கேட்டாலும் திருமணத் திற்குப் பின்தான் இதெல்லாம்...இப்பொழுது வேண்டா மென ஒதுக்கிவிடுவாள்.

நான் மனிதன், மரமல்ல.

எனக்கும் உணர்ச்சியுண்டு.

அவளிடம் பெற முடியாததை, அவள் தர மறுத்ததை எப்படியும் பெற வேண்டும் எனும் ஒரு வேகம்......

அந்த வேகத்திற்குப் பலியானுள் ஒருத்தி

அவள் தான் எனது மனேவி.

பெண்களே!

இப்பொது கூறுங்கள்

நான் ஏமாற்றுக்காரனு?

இறுதியாக காதலிக்கும் பெண்களுக்கும் ஒரு வேண்டு கோள்......புத்திமதி

சமநிலேயில் இருங்கள்.

தொடகூட விடாமல், ஒதுங்கி இருக்காதீர்கள்.

இருபதாம் நூற்ருண்டிலும் இப்படிப்பட்ட பெண்களா; என வியக்க வேண்டாம்

அநேகர் இருக்கின்ருர்கள்.

ஆனுல் இவர்கள்.

தங்கள் காதலர் பல ஆண்கள் மத்தியில் இருக்கும் போது,

நெருங்கி இருப்பார்கள்.

அவர்களாகவே கதலனின் கையைப்பிடிப்பார்கள்

தங்கள் உரிமையை நிலேநாட்டுவார்கள்.

அதே நேரத்தில்......

உங்கள் கதலன் இழுக்கும் இழுவைக்கெல்லாம் விட்டும் கொடுக்காதீர்கள்.

காதலில் வெற்றியோ, தோல்வியோ, எதையும் தாங்கும் சத்தியைப் பெறுங்கள்.

காதலித்தவன் கிடைக்காவிட்டால் கன்னியாகவே வாழ்வது எனும் கொள்கையை விட்டு விடுங்கள், என்ருலும் வெற்றிக்காக்ப் பாடுபடுங்கள்.

—சந்திரகுமார்.

---

எதிலும் 'பற்று' இருக்க வேண்டும்—அந்த
பற்று வெறியாக மாறக் கூடாது.

## எதிர்கால மனைவி

சென்ற முறை கருத்துக்குவியல் 2இல் உங்கள் எதிர்கால மனைவி எப்படிபட்டவளாக இருக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம். அதற்கு உதவியாக சில கேள்விகளையும் கேட்டிருந்தோம். பல நூறு விடைகள் வந்தன. மகிழ்ச்சி விடைகளிலே பல நல்ல எண்ணங்கள் அவற்றை செயலில் காட்டுவீர்கள். நீங்கள் அனுப்பிய விடைகளை, உங்கள் எண்ணங்களை இதோ தருகின்றோம்.

1. எதிர்கால மனைவி நல்ல குணம் அன்பு பரந்த மனப்பான்மையுடையவளாக இருக்க வேண்டுமென 100% ஆண்களும், கல்வியறிவுடைய அழகுடையவளாக இருக்க வேண்டுமென 85% ஆண்களும், கணவனே கண்கண்ட தெய்வமாக இருக்க வேண்டுமென 20% ஆண்களும் கட்டுப்பாடுடையவளாக இருக்க வேண்டுமென 5% ஆண்களும் விரும்புகின்றார்கள்.

2. மனைவி ஒரு விலைபொருளல்ல. ஆகவே சீதனப்பிரச்சனை தலைகாட்டக்கூடாது என 100% ஆண்களும் அதே நேரம் மனைவியின் எதிர் காலம் கருதி அவளது பெற்றோர் ஏதும் கொடுத்தனுப்பினால் பெற்றுகொள்வோம் என 5% ஆண்களும் கூறுகின்றார்கள்.

3. கணவனைப் போல் மனைவி தனித்தன்மையுடைய (unique) மனித மாண்புடைய ஒரு பெண். எனவே நிட்சயமாக அவள் கொள்கைகள், அந்தரங்கங்கள், உணர்ச்சிகளை மதிக்கப்படும். அதே நேரத்தில் அவள் குடும்பநிலை, கணவனின் உளநிலை இவற்றை அறிந்து தன்னை சூழ்நிலைக்கேற்ப வாழப்பழக்கிக் கொள்ளல் நல்லது.

'அன்பு என்பது வெறும் உடலுறவில் தங்கியதல்ல. வாழ்விலே ஏமாற்றப்பட்ட பெண் அனுதாபத்துக்குரியவள். இக்கருத்தில் ஆண்களிடையே கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

திருமணத்திற்கு முன் அப்படிப்பட்ட பெண்களை சந்தித்தால் அவர்களுக்கு வாழ்வளிக்க தயங்கமாட்டோம் என 30% ஆண்கள் கூறியுள்ளனர். திருமணத்தின் பின்னர் மனைவி ஏமாற்றப்பட்டவள் எனத் தெரிந்தால் அது தங்களின் வாழ்வில் ஒருவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. என 80% ஆண்களும், அவள் தவறியவள் என தெரிந்த பின் எப்படி மகிழ்ச்சியாக வாழ்வது

## சிந்தனைத் துணுக்கு

நேற்று நீ தனியே பிறந்தாய். இன்று நீ சமுதாயத்தில் வாழ்கிருய். நாளை நீ தனியே இறப்பாய். எனவே உன்னிடம் எதிர்பார்க்கப்படுவது, இன்று நீ எவ்வாறு சமுதாயத்துடன் வாழ்கின்ருய் என்பதே. எப்படி தனிமையில் வாழ்கிருய் என்றல்ல. எனவே நீ இன்று செய்யும் ஒவ்வொரு சிறிய பணியும், நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உறுதுணை புரிய வேண்டும்.

நீ உன் பேச்சுத்திறமையால் உன் குற்றங்களை மூடி மறைக்கலாம் ஆனுல், சமுதாயம், உனது பேச்சினுலல்ல உனது செயலைக் கொண்டு உனது உண்மை உருவத்தை மதிப்பிடும்.

வாழ்வெனும் சோலையில், தென்றலும் புயலும் மாறி, மாறி வீசும். முன்னதை இன்முகத்துடன் ஏற்பது போல் பின்னதை திடத்துடன் எதிர்த்து நிற்க தன்னை அமைத்துக் கொள்ளவிடில் எம்மலரும் கனியாக மாறுவது அரியதாகும்.

ஏழையின் வாழ்வில் மலரும் காதல் சில சமயங்களில் நீர்குமிழி போன்றதாயிருக்கிறது.

வாழ்க்கை கடலில், புயல் வீசலாம். அலைகள் மோதலாம். அதனுல் உன் வாழ்க்கை படகு கவிழ்ந்து போகலாம். ஆனுல் நீ இறைவன் கரத்தை இறுகப் பற்றிக் கொள்வாயாகில் நிச்சயம் வெற்றி காண்பாய்.

— ராஜா, கண்டி.

---

என சிலரும், அது அந்த நேரத்தில் எங்கள் நிலையை பொறுத்தது என சிலரும் கூறியுள்ளார்கள்.

5. அனைவரும் காதல் திருமணத்தையே விரும்புகின்ருர்கள். காதலிக்க ஆரம்பித்தபின் வெளியில் இருந்து எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அவளை கைவிடமாட்டேன் எனவும் உறுதிமொழி அளிக்கின்ருர்கள்.

6. மனைவி இல்லத்திலேயே இருக்க வேண்டும். அவள் தொழில் செய்வது விரும்பதக்கதல்ல. குழந்தைக்கு உண்மையான அன்பு தாயிடமிருந்து கிடைக்கின்றது. தாய் தொழிலுக்குப் போய்விட்டால் குழந்தையை வேறு யாராவது பராமரிக்க வேண்டும். ஆகவே உண்மையான அன்பு குழந்தைக்கு கிடைக்காது. எனவே அவள் வேலைக்கு செல்வது விரும்பத்தக்கதல்ல எனப் பலரும், வேலைக்கு செய்வதில் தவறில்லை என சிலரும் கூறுகின்ருர்கள்.

## சினிமாப் பாடல்கள் பேசுகின்றன

பணம் இருக்கும்போது ஒரு பேச்சு
பணம் இல்லாதபோது ஒரு பேச்சு
பணம் தந்தால் அப்போது ஒரு பேச்சு
பாழும் மனித நிலை அப்படியும் ஆச்சு

— பணம் பந்தியிலே.

மேகங்கள் கண்கலங்கும் மின்னல் வந்து துடிதுடிக்கும்
வானகமே உருகாதோ வள்ளல் முகம் பாராமல்
உன்னுடனே வருகின்றேன் என்னுயிரை தருகின்றேன்.
இறைவா நீ ஆணையிடு.

— ஒளிவிளக்கு.

காரில் ஏறி நானும் அவரும்
கற்பனை உலகம் செல்வோம்
காசும் பணமும் தேவையில்லை.
கருணை அங்கே செல்வம்.

— பாக்கியலட்சுமி.

என்ன வளம் இல்லையிந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்த வேணும் வெளிநாட்டில்
ஒழுங்காய் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்

— விவசாயி.

இருட்டினில் வாழும் இதயங்களே—கொஞ்சம்
வெளிச்சத்தில் வாருங்கள்
நல்லவர் உலகம் எப்படி இருக்கும்
என்பதை பாருங்கள்
எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்
என்பது கேள்வியில்லை — அவன்
எப்படி வாழ்ந்தான் என்பது உணர்ந்தால்
வாழ்க்கையில் தோல்வியில்லை.

— நான் ஆணையிட்டால்.

போட்டாளே
உன்னையும் ஒருத்தி பெத்துப் போட்டாளே
நாட்டுக்கும் வீட்டுக்கும் லாபமில்லாமே
நல்லதைச் சொல்லவும் மூளையில்லாமே

— லட்சுமி கல்யாணம்.

## பரந்த மனம் வேண்டும்!

மனிதனின் வாழ்வில் பல பிரச்சினைகள். பிரச்சினைகளிலிருந்து நாம் ஓடிவிட்டால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. பிரச்சினைகளை எதிர்க்கவேண்டும், போராட வேண்டும், முடிவுகாண வேண்டும்.

உதாரணமாக,

நாம் ஒரு பாடசாலையில் கல்வி கற்கின்றோம். அந்த பாடசாலையிலே பல குறைபாடுகள்... வசதி குறைவுகள். ஆகவே, நாம் அந்த பாடசாலையை விட்டு வசதிகள் நிறைந்த வேறொரு பாடசாலைக்குப் போகின்றோம். எமது பிரச்சினை தீர்ந்துவிடும். ஆனால் அந்த பாடசாலையின் பிரச்சினை, வசதி குறைவுகள்... அப்படியே இருக்கும்.

* * *

எதிர் வீட்டிற்கும் அடுத்தவீட்டுக்கும் இடையில் சச்சரவு, சண்டை. உங்கள் வீட்டில் உள்ள ஆண் சண்டையை நிறுத்தப் புறப்படுகின்றான். உடனே நீங்கள், "ஆமா, இத்தனைபேர் இருக்கிறாங்க... உங்களுக்கு மட்டுந்தான் அக்கறையாக்கும்... சும்மா இருங்க... ஊரார் பிரச்சினையில் சும்மா மாட்டிக்கிட்டு..." எனக்கூறி உங்கள் கணவரை தடுத்துவிடுவீர்கள்.

மறுநாள்...

உங்கள் வீட்டாருக்கும் எதிர் வீட்டாருக்கும் இடையில் கைகலப்பு. பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்று இரவு...

"எத்தனை பேர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.. ஒருத்தனாவது வந்து விலக்கி விட்டானா... சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தானுங்க... அவனுகளுக்கில சண்டை வரட்டுமே... நீங்க ஒன்றுக்கும் போகக்கூடாது..." உங்கள் கணவரிடம் உங்கள் முறைப்பாடு.

* * *

இன்று எம்மில் பலர் 'எம்மைப்பற்றி' மட்டுமே சிந்திக்கின்றோம். நான் வாழ்ந்தால் போதும் நான் நன்றாக இருந்தால் போதும்... மற்றவர்கள் எப்படி இருந்தால் எனக்கென்ன... அவனவன் வாழ்க்

## உயர்ந்திட வேண்டும்

ஏற்றத் தாழ்விலா பூமியைப் படைக்க
யாவரும் திருந்தி ஆகனும்!
தோற்றத்தில் ஒண்ணும் செய்கையில் ஒண்ணும்
காட்டும் மனிதர்கள் மாறனும்!!

தப்பான பாதையில் செல்லும் மனிதர்கள்
தன்னை உணர்ந்து பார்க்கனும்!
எப்பொழுதும் அறவழி நடக்கசொன்ன
இயேசு, புத்தர் சொல்ல கேட்கனும்!!

காட்டு விலங்கினும் கொடிய போக்கிலே
காலம் கடத்தினல் சரியில்லே!
கூட்டு சேர்ந்து நாம் கடமை ஆற்றினல்
குடும்பம் உயர்ந்திட தடையில்லே!!

— நன்றி, 'ராணி'

---

கையை அவனவன் பார்த்துக்கொள்ளட்டும். இந்த அலட்சிய மனப்பான்மையுடனேயே வாழ்கின்ருேம்.

நாம் குறைகள் நிறைந்த பாடசாலையிலேயே இருந்து கொண்டு அந்த குறைகளை நீக்க முயற்சி செய்தால்... பாடுபட்டால்.. போராடிஞல்... வெற்றி கண்டால்... நாம் அதிகம் பயன்பெருவிட்டாலும் எமக்கு பின்ஞல் வருபவர்கள், எமது பிள்ளைகள் திட்சயமாக பயன் பெறுவார்கள். இங்கு பாடசாலை ஓர் உதாரணம். இதே போல்தான் மற்ற விடயங்களிலும் ..

எமது வாழ்வும் இந்நிலையில்தான் அமையவேண்டும். ஆஞல், இந்த பரந்த மனப்பான்மை இன்று எம்மில் இல்லை. அதஞல்தான் நாம் இன்று இந்நிலையில் இருக்கின்ருேம் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

ஆகவே, நாம் மனிதஞக வாழவேண்டுமென்ருல், எமது வாழ்வு என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ருல், எம்மிடையே பரந்த மனப்பான்மை வேண்டும். பிரச்சினைகளிலிருந்து ஒதுங்காமல், பிரச்சினைகளினிடையே வாழ்ந்து, அவற்றை எதிர்த்து, போராடி வெற்றி கொள்ள வேண்டும்.

— எஸ். ஜே. எவ்.

# இதுதான் வேண்டும்

நமது வாழ்விலே நமக்கு ஓர் இலட்சியம் இருக்க வேண்டும்.

அதை நோக்கி நாம் வீறுநடை போடவேண்டும்.

ஆனால்,

அந்த இலட்சியமே எமது வாழ்க்கையாக மாறி விடக்கூடாது

அப்படி மாறினால்...

நாம் நாமாக இருக்கமாட்டோம்.

எமது இலட்சியம் நிறைவேற எதையும் செய்ய தயங்கமாட்டோம்.

நீ ஓர் அலுவலகத்தில் வேலை செய்கின்றாய்.

பதவி உயர்வை விரும்புகின்றாய்.

நல்லது.

உங்களிடம் தகுதி இருந்தால் பதவி உயர்வு உன்னைத்தேடி வர முயற்சி செய்.

மாறாக,

பதவி உயர்வை தேடி நீ சென்றால் பலருக்கு 'காக்கா' பிடிக்கவேண்டும்.

வாலாட்டிக்கொண்டு பலர் பின்னால் திரியவேண்டும்.

விருந்துகள், இலஞ்சம், அது, இது என செலவு செய்யவேண்டும்.

இப்படியாக.. பதவி உயர்வு கிடைத்தவுடன்.

நீ செலவுசெய்த பணத்தை எப்படியும் பெற விரும்புவாய்.

இது இயற்கை.

உனது வாழ்விலும் இலஞ்சம் குறுக்கிடும்.

அது வெளியில் தெரிந்தால்.

விசாரணைக் கமிஷன்.

தீர்ப்பு.

எந்நேரமும் பயத்தின் மத்தியில் வாழ்க்கை.

நீ அடைந்த புகழ், பதவி வந்த வேகத்தைவிட பல மடங்கு கூடுதலான வேகத்துடன் உன்னைவிட்டுப் போய்விடும்.

வாழ்க்கையின் தத்துவமே இதுதான்

உனக்கு ஏதாவது தேவையென்றால், 'இதுவேண்டும்' எனக்கேள்

'இதுதான் வேண்டும்' எனக்கேட்காதே.

'இதுதான் வேண்டும்' எனக்கேட்டால் உன்னால் உண்மையான வாழ்க்கை வாழ முடியாது போலியான வாழ்க்கையையே அடைய முடியும்.

நீ எதிர்பார்க்கும் 'வாழ்வு' உனக்கு கிடைக்காவிட்டால் இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்."

— ஸ்ரீவன்

சி. என். பி லிமிட்டெட் கொழும்பு-12.